மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, கடுமையான நடவடிக்கைகள், கடுமையான உத்தரவுகள் என்று நான் குறிப்பிட்டது தண்டனை வழங்க அல்ல. அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை. சில திட்டவட்டமான நடவடிக்கை என்று அர்த்தம். அந்த நடவடிக்கையில் இன்னும் ஜாஸ்தியாக அலவன்ஸ் கொடுக்கலாமா வேறு சலுகைகளை ஜாஸ்தியாக கொடுக்கலாமா என்று ஆராய்ந்து முடிவு செய்வது கூட அடங்கும்.

திரு. கா. கோபாலகிருஷ்ணன்: தலைவரவர்களே, ஊட்டியைப் பொறுத்தவரையில் சில உத்தரவுகளைப் போடுவதற்கு அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஊட்டியைப் போன்றிருக்கிற கொடைக்கானலிலும் அதேமாதிரியான உத்தரவுகள் போடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, இது ஒரு பொதுவான பிரச்சனை. இந்த பொதுவானப் பிரச்சனையைப் பொறுத்தவரையில், இதைச் சமாளிக்க இப்போது

Temporary appointments to the posts of Assistant Surgeons in the Tamil Nadu Medical Service are being made now. This temporary appontment is done from among the medical graduates registered with the Director of Medical Services and Family welfare in the order of seniority. So far, 100 women candidates and 83 men candidates have been appointed. At present a list of 68? candidates (women) for temporary appointment is under consideration.

இவைகள் எல்லாம் பொதுவாகக் கேட்டக் கேள்விக்கு அளிக்கப்படும் பொதுவான பதில். இப்படி தற்காலிகமாக எடுத்துக் கொள்ளும் டாக்டர்களின் எண்ணிக்கையை ஜாஸ்தியாக்க இருக்கிறோம். அந்த நடவடிக்கை மூலம் எங்கெங்கே பற்றாக்குறை இருக்கிறதோ, காலி இருக்கிறதோ அங்கெல்லாம் இந்த 'காடர்' அமைக்கப்பட சௌகரியமாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

பரீட்சைக்குப் பணம் கட்டும் தேதியை நீட்டித்தல்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு முக்கியமான பிரச்சனையைக் கொண்டுவருகிறேன். எஸ்.எஸ்.எல்.சி., பி.யு.சி. பரீட்சைகளில் தேறாதவர்கள் அக்டோபர் மாதம் நடைபெறும்

[திரு. சோ. அழகர்சாமி] [1980 ஆகஸ்ட் 1

பரீட்சைக்கு மனுச் செய்ய கடைசி நாள் 31-7-1980 என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இன்னும் பல்வேறு இடங்களில் மனு செய்வதற்கான 'பாரங்கள்' வந்து சேரவில்லை. ஆகவே, உரிய காலத்திற்குள்ளாக அப்ளிகேஷன் போட முடியவில்லை; மனுபோடுவதற்கான காலத்தைக் கொஞ்சம் நீட்டிக்க வேண்டுமென்று கேட்டு ஏராளமான தந்திகள் வந்துகொண்டிருக்கின்றன. அந்த காலவரம்பை இன்னும் 10 நாட்களுக்கு நீட்டித்துக்கொடுத்தால் வசதியாக இருக்கும். இப்போது நேற்றோடு காலக்கெடு முடிந்துவிட்டது. பாரம் கிடைக்காததால் இதற்குள் பலரால் அப்ளை செய்ய முடியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திடீரென்று அவையில் இதுபோல் ஒரு பிரச்னையை எழுப்புவது சரியல்ல. முன்னமே எழுதிக்கொடுத்துவிட்டு பேரவைத் தலைவரின் அனுமதியோடு எழுப்பவேண்டும்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, நான் சொல்கின்ற பிரச்னை .....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்படியே நாம் இருவரும் பேசிக்கொண்டிருந்தால் அவையின் மற்ற அலுவல்களை எப்படி நடத்துவது? ஆகவே அனுபவம் பெற்ற உறுப்பினர் அவர்கள் இந்தமாதிரிப் பிரச்னைகளைப் பேரவையில் கொண்டு வருவதற்குரிய சரியான முறைகளைக் கையாள வேண்டும். எதையும் முறைப்படித்தான் கொண்டுவர வேண்டும்.

திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பேரவைக்கு நான் ஒரு தன்னிலை விளக்கத்தை அளிக்க விரும்புகிறேன்.

(கூச்சல், குழப்பம்.)

[முற்பகல் 10-10]

* * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை ராமசாமி அவர்கள் கொடுத்துள்ள தன்னிலை விளக்கத்தை நான் படித்துப் பார்க்க வேண்டும். அதனால் அதை நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன். அந்தத் தன்னிலை விளக்கம் சம்பந்தமாக பேசப்பெற்ற அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற வேண்டும் என்று ஆணையிடுகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.